அதிலே தவறு என்று சொன்னால், போய்ப் பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மற்ற கேள்விக்கு, தனிக் கேள்வி கேட்டால், விவரங்கள் சேகரித்து தரப்படும்.

தமிழகத்தில் முந்திரி உற்பத்தி.

558—(*வினா எண் 2426)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) வருடத்துக்கு சராசரி முந்திரிக்கொட்டை உற்பத்தி எவ்வளவு?

(இ) அரசு மூலம் விற்பனையில் லாபம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 12.29 இலட்சமும், 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 14.19 இலட்சமும் தோட்டக்கலைத் துறையால் செலவிடப்பட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் ஆண்டு சராசரி முந்திரிக்கொட்டை (பதப்படுத்தாதது) உற்பத்தி ஏறத் தாழ 8,400 மெட்ரிக் டன் ஆகும்.

(இ) அரசு மூலம் முந்திரி விற்பனை ஏதும் செய்யப்படுவதில்லை ஆகையால் இக்கேள்வி எழவில்லை.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசு எவ்வளவு உதவித் தொகை அளித்துள்ளது? முந்திரி விலை தமிழகத்தில் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதன் விலையைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகும் செலவை மத்திய, மாநில அரசுகள் சமமாக ஏற்றுக் கொள்கின்றன. முந்திரி விலையைப் பொறுத்த வரையில் நாம் கட்டுப்படுத்த இயலாது.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாவட்டந்தோறும், மாடல் பண்ணை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1986 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலே செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்தோடு முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு 'நபாட்' உதவியோடு தென் ஆற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

559—(*வினா எண் 3198)—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''முந்திரி வளர்ச்சிக் கழகம்'' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரியினுடைய விலையை நிர்ணயிப்பதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், எதிர் காலத்திலே யாவது இந்த முந்திரி வளர்ச்சிக் கழகம் அமைக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது போன்ற ஒரு அமைப்பு கேரள மாநிலத்திலே ஏற்படுத்தப்பட்டு அதிலே வியாபார ரீதியிலே வெற்றி ஏற்படாததால், நிலைமையை சீர் தூக்கிப் பார்த்து, அந்நிறுவனத்தை மூடிவிட்டதாகத் தெரிகிறது. முந்திரியின் விலையைப் பொறுத்த அளவிலே வெளி நாட்டிலே நிலவக் கூடிய விலையைப் பொறுத்துத்தான், உள் நாட்டிலே முந்திரியின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே வளர்ச்சிக் கழகம் அமைப்பதால் பயன் இல்லை.

திரு. வி.பி. சிந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு தெரிந்த அளவுக்கு கேரளத்திலே உள்ள கழகம் இன்னும் மூடப்படவில்லை என்பதாக அறிகிறேன். அந்த கேஷுநட் கார்ப்பரேஷன் வந்ததற்குப் பிறகுதான், இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிற முந்திரியில் ஒரு கணிசமான அளவிற்கு அங்கே செல்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் அது இல்லை. ஆகவே தமிழகத்திலே ஒரு கேஷுநட் (Cashewnut) கார்ப்பொரேஷனை அமைத்து, மத்திய அரசிடமிருந்து கோட்டா பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?